**தலைப்பு 123 – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 123 – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) மூலதன செலவினம்

நிதிக் கூற்றுக்களுக்குரிய மூலதன செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதன சொத்துக்களை கைப்பற்றல் செலவினம் ரூபா 117.15 மில்லியன் ஆக இருந்த போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 74.78 மில்லியன் ஆக நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 105.91 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டமையால் அதன் பெறுமதி ஒன்றுக்கொன்று இணங்கியிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டு அதன் சொத்துக்கள் அமைச்சுக்கு கையளிக்கும் போது திறைசேரி கணக்குகளுக்கு பிரதான அமைச்சின் ஆரம்ப மீதியே கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி அச்சிடல் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்களை தயாரித்தமையினால் இந்த பெறுமதி சீராக்கும் போது இணங்கியிருக்கவில்லை. | ஆண்டின் போது கையளிக்கப்பட்ட சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### (ஆ) கட்டுநிதி மீதி

கட்டுநிதி மீதி கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்கொண்டு வரப்பட்ட ரூபா 20 மில்லியன் தீர்க்கப்படாத கட்டுநிதி | இந்த தொகையை தீர்த்து வைப்பதற்காக திறைசேரி | தீர்க்கப்படாத கட்டுநிதி வரவு மீதி, நிதிப் |

| | | |
|---|---|---|
| வரவு மீதி, பொதுத் திறைசேரியின் ஆலோசனையின் படி அங்கீகாரத்தை பெற்று தேசிய வரவு செலவு திட்ட நிதி ஏற்பாட்டில் ஒதுக்கி நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்படுகின்றது. | பிரமாணம் 109 இன் பிரகாரம் பதிவழிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலைக்கப்பட்ட இராஜாங்க அமைச்சில் இருந்து மாற்றப்பட்ட ரூபா 1,876 மில்லியன் பெறுமதியான பொருட் பதிவேட்டு பொருட்கள் இந்த அமைச்சுக்கு மாற்றும் போது நிதிப் பிரமாணம் 751, 755(1) மற்றும் (2) பந்திகளின் பிரகாரம் பேரேட்டில் காண்பிக்கப்படுகின்ற பொருள் மீதிகள் பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்படாதிருந்ததுடன், அமைச்சின் பொருட் பதிவேட்டு புத்தகங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் திறைசேரியில் கணனி மயப்படுத்தப்பட்ட சொத்து முகாமைத்துவ தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் சில மாதங்களில் பதிவேடுகளை நாளது வரையாக்குதல் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் ஆதனங்களில் பொறுப்பை இன்னொரு தரப்பினருக்கு கையளிக்கும் போதும், கையேற்கும் போதும் அவற்றின் சரியான தன்மையை பரீட்சித்து ஆவணங்களுக்கு கொண்டுவரல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 மீண்டெழும் செலவின விடயங்களில் கூட்டு மொத்தமாக ரூபா 2.33 மில்லியன் நிதி ஏற்பாடு மற்றும் 20 மூலதன செலவின விடயங்களில் கூட்டு மொத்தமாக ரூபா 313 மில்லியன் நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தமையால் இந்த நிதி ஏற்பாடுகளில் இருந்து மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | வரவு செலவு திட்ட மதிப்பீடு தயாரிக்கும் போது உள்ளபடியாக ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்வுகூறலின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒரு செலவின விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 0.77 மில்லியன் பெறப்பட்டிருந்த போதிலும், அந்த தொகை உரிய பணிகளுக்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியான எதிர்வு கூறலின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ஆண்டிற்குரிய பணிகளுக்காக செலவிடப்படல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு முரணாக அமைச்சினால் 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் சேமிப்பான ரூபா 3.43 மில்லியன் எல்லையை விஞ்சி ரூபா 396.57 மில்லியன் பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | ஒருசில செலவின விடயங்களுக்காக வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டு எல்லையினை விஞ்சி கடப்பாடுகளுக்கு உட்படுவதுடன், அந்த கடப்பாடுகள் அடுத்து வரும் முதலாவது கணக்காண்டின் போது உரிய பணிகளை நிறைவேற்றியதன் பின்னர் அதற்குரிய பொறுப்புக்கள் விடுவிக்கப்படுகின்றது. | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படாதிருத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், அமுல்படுத்துவதற்கு முடியாத புத்தளம் அருவக்காலு பிரதேசத்தில் 266 ஏக்கர் அளவிலான பிரதேசத்தில் கழிவுப் பொருள் சேகரிக்கும் நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு அதற்கு மேல் மாகாண வலயங்களில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் 1200 மெற்றிக் டொன் புகையிரத வழி ஊடாக அகற்றும் செயற்திட்டம் 2017 ஏப்ரல் 14 ஆம் திகதி மீதொட்டமுல்ல கழிவுப் பொருள் மலை சரிவினால் உயிரிழந்த 32 பேர்களுடன் அமுல்படுத்துவதற்காக அமைச்சரவை | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து பிரதேசத்தின் மக்களால் அதிக எதிர்ப்பு தெரிவித்தமையின் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டமை, 2020/2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் தொற்று நோய் நிலைமை, செயற்திட்டத்தின் பிரகாரம் வெள்ள பாதிப்பிற்கு உட்பட்ட அலையொன்றை நிர்மாணிப்பதற்கு முடியாமையினால் 2021 | செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை மக்களுக்கு விரைவாக வழங்குவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டு 2017 மே 09 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது. இது வெளிநாட்டு நிதி உதவியின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், உலக வங்கியின் பரிந்துரையை அமுல்படுத்துவதற்கு முடியாமையின் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்கப்பட்ட அ.டொலர் 700,000 நிதி உதவி தொகை இழக்கப்பட்டமையினால் இந்த செயற்திட்டம் உள்நாட்டு நிதியத்தில் இருந்து அமுல்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 19,127 மில்லியன் ஆக இருந்ததுடன், சாத்திய வள ஆய்வு நடவடிக்கைகளுக்கு ரூபா 85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2018 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் 30 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கும் 04 பொதிகளின் கீழ் அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் கழிவுப் பொருட்களை இடம் மாற்றுகின்ற நிலையங்களை நிர்மாணித்தல் சுகாதாரமான நிலங்களை நிரப்பி நிர்மாணித்தல் புகையிரத வீதியினை நீடிப்பதற்கான 03 பொதிகளில் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் சீன கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், இந்த நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தேவையான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்யும் பொதியின் கீழ் 04 புகையிரத எஞ்சின் தொகுதிகள் ரூபா 8.27 மில்லியன் செலவில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் இறக்குமதி செய்து 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும், உரிய பணிகளுக்கு ஈடுபடுத்தப்படாமையினால் புகையிரத திணைக்களத்தால் ஏனைய பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 94 கொள்கலன் பெட்டிகள் அ.டொலர் 0.8 மில்லியன் செலவில் 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், 34 புகையிரத பெட்டிகள் அ.டொலர் 2.3 மில்லியன் பெறுமதியில் இந்திய கம்பனியில் இருந்து இறக்குமதி செய்வதற்காக 2019 ஒக்டோபர் 21 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், உரிய நிறுவனத்தால் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டமைப்பு எண்ணக்கரு திட்டத்தை சமர்ப்பிக்காமையினால் உடன்படிக்கை செயலிழந்தமையினால் மீளாய்வாண்டின் நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ள நிலைமையின் காரணமாக இயந்திர உபகரணங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டமை பட்டியல்களை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டமையால் ஒப்பந்த கார நிறுவனம் சில மாதங்களில் நிர்மாணங்களில் இருந்து விலகி இருந்தமை போன்ற காரணங்கள் இதற்கு தாக்கமளித்திருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | இறுதி வரையிலும் புகையிரத பெட்டிகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது. கழிவுப் பொருள் குவிக்கும் நிலையம் வெள்ள நீர் ஆபத்துக்கு முகங்கொடுப்பதால் பொருத்தமான திட்ட முறைமையொன்றை தயாரிக்காமையினால் 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கி செயற்பாடற்ற நிலைக்கு உட்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படு நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. எனினும், இந்த செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 21,045 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்யாமையினால் செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | 09 மாகாணங்களில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 2021 திசெம்பர் 15 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட மொத்த ஒப்பந்த கிரயம் ரூபா 196.2 மில்லியன் ஆன 43 கடைகளுடன் கட்டுபெத்த சந்தை தொகுதியின் கட்டிடம், 18 கடைகளும், ரூபா 5.6 மில்லியன் செலவில் பொருத்தப்பட்ட மின் பாரந்தூக்கி மற்றும் குழாய் முறைமைகள் நெருக்கடியான ஒரு மலசல கூடமும் செயற்திட்ட நடவடிக்கைகளில் பூர்த்தி செய்யப்பட்டு 2021 திசெம்பர் 15 ஆம் திகதி முதல் விளைவற்று காணப்பட்டமை 2023 பெப்ரவரி 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | மொத்த கடைகளின் அளவும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது. அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் சேவை பொறியியலாளரால் மலக் கழிவுகளை சுத்தகரிக்கும் முறைமை எதிர்காலத்தில் உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்கு வழங்குனருடன் உடன்படிக்கை செய்வதற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. | கட்டிட நிர்மாணத்தால் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்காக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தோட்ட துறையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஹரித்த ரன் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு இறுதி கட்டத்தில் காணப்படுகின்ற 466 வீடுகளும் பூர்த்தி செய்வதற்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 65 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தில் 60 சதவீதமான 282 வீடுகள் மாத்திரமே முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயற்திட்டத்தை நடைமுறையில் திட்டமிட வேண்டியிருந்தமை மற்றும் இலக்கிடப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2021 நவம்பர் மாதம் வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய வேண்டி காணப்பட்ட ஹட்டன், நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி போன்ற 06 வலயங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 451 மில்லியன் தொகையில் ரூபா 227 மில்லியன் அதாவது 50 சதவீதம் தோட்ட மனித வள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின இறுதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | தோட்ட பிரிவின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரித்துறுதி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தோட்டங்களில் 1,000 குடும்பங்களுக்கு காணி உரித்தை உறுதிப்படுத்துவதற்காக ரூபா 2.5 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 300 குடும்பங்களில் மாத்திரம் காணி உரித்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அது எதிர்பார்த்த இலக்கில் 30 சதவீத அளவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தோட்டப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட இந்திய நிதி உதவியின் கீழ் 4,000 வீடுகள் அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 180 வீடுகளை முழுமையாக பூர்த்தி செய்வதற்காக ரூபா 95 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 35 மில்லயின் செலவில் 26 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 37 சதவீதம் மற்றும் 14 சதவீதமாக இருந்தது. | மூலப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமை, எரிபொருள் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் நிர்மாண வேலைகள் வீழ்ச்சியடைந்தது. இது வரையில் 154 வீடுகளின் நிர்மாணங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Out Come) பெற்றுக் கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நூறு நகர செயற்திட்டத்தின் கீழ் ரூபா 496 மில்லியன் செலவில் 2022 யூன் 30 ஆம் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 04 நகர அழகுபடுத்தல் செயற்திட்டங்கள், 02 வீதி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய 15 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 11 செயற்திட்டங்கள் தற்போது கையளிக்கப்பட்டுள்ளது. திட்டங்களுக்காக புகையிர திணைக்களத்தின் இணக்கப்பாடு கிடைக்கப் பெறாமை காணியின் உரித்துறுதி தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றமை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றமையால் ஏனைய செயற்திட்டங்களை கையளிப்பதற்கு முடியாதுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்வதற்காக செயற்திட்டத்தை பூர்த்தி செய்து உடனடியாக உரிய நிறுவனங்களுக்கு கையளித்தல் வேண்டும். |
| (ஆ) | சூகித புரவர நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் புளத்சிங்கள ஏகல்ஓய பல்நோக்கு கட்டிட நிர்மாணத்தின் ஒப்பந்தம் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபா 41 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும். ஒப்பந்தம் கையளித்ததன் பின்னர் 03 கட்டங்களில் பகுதிகளாக்கப்பட்டு ஒப்பந்த பெறுமதி ரூபா 153 மில்லியன் வரை 272 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், கேட்போர் கூடத்திற்காக ஆசனங்களை பொருத்துதல், வழிப்பதனாக்கியிடல், வெளிச்சமூட்டல், மின் பாரந்தூக்கி, மேடைத் திரைகளை அமைத்தல் போன்ற வேலைப் பகுதிகளை மேவுகை செய்யாமல் கட்டிடத்தின் உரித்து புளத்சிங்கள பிரதேச சபைக்கு 2018 ஒக்டோபர் 20 ஆம் திகதி கையளிக்கப்பட்ட போதும், கட்டிடம் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக பயன்படுத்துவதற்கு முடியாது காணப்பட்டது. எனினும், 2021 நவம்பர் 16 ஆம் திகதி | 2021 நவம்பர் 16 ஆம் திகதி முதல் 30 வருட காலத்தற்காக பாடநெறியை நடாத்துவதற்காக தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு புரிந்துணர்வு உடனபடிக்கையின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. | தேவையினை சரியாக இனங்கண்டு நிர்மாண திட்டங்களை செய்ய வேண்டியிருந்ததுடன், நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை பயன்படுத்தக் கூடிய வகையில் முழுமைப்படுத்தி உரிய பிரிவுகளுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்பயிற்சி அதிகார சபையின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கட்டிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 04 வருடங்கள் அளவில் கடந்திருந்த போதிலும், அந்த கட்டிடத்தை நிர்மாணித்தால் எதிர்பார்த்த பணிகளுக்கு ஈடுபடுத்தப்படாதிருந்தமை 2023 மார்ச் 03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | தோட்ட சமூகத்திற்காக வீடுகளை நிர்மாணித்தலை அமுல்படுத்தும் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு கடனை அறவிடும் சகல நடவடிக்கைகளும் உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றும் பொறுப்பு பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி பொறுப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக உரிய வீடமைப்பு திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 07 சதவீதம் முகாமைத்துவ கட்டணம் ஒன்றை செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 முதல் 2018 வரை அமுல்படுத்தப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திறப்பு கையளிக்கப்பட்ட மற்றும் கையளிக்கப்படாத மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி முறையே ரூபா 2,920 மில்லியன் மற்றும் ரூபா 946 மில்லியன் ஆன 4,202 வீடுகளுக்காக செயற்திட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 7 சதவீதமான கட்டணமாக ரூபா 270 மில்லியன் அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நலனாளிகளிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் தவணைப் பணம் ரூபா 1,997 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்ட | வீடுகளை நிர்மாணிப்பதற்கு முன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை அன்னியோன்ய புரிந்துணர்வுடன் முடிவுறுத்தி 2023 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் அளவான ரூபா 500 மில்லியனில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்யக்கூடிய வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்களின் கடன் தவணைப் பணம் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது 2022 ஒக்டோபர் மாதம் கடன் தவணைப் பணமாக ரூபா 62,400 அறவிடப்பட்டுள்ளது. | தோட்ட சமூகத்திற்காக வீடமைப்பு நிர்மாணங்களை அமுல்படுத்தும் வழிகாட்டி கோவையின் நியதிகளை மீறுதல் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

12 வீடமைப்பு செயற்திட்டங்களில் 30 இற்காக 145 வீடுகள் மற்றும் 602 வீடுகளை நிர்மாணிக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் முறையே ரூபா 201 மில்லியன் மற்றும் ரூபா 837 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.
மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஒட்டுமொத்த கிரயமாக முறையே ரூபா 110 மில்லியன் மற்றும் ரூபா 228 மில்லியன் புதிய ஒப்பந்த காரருக்கு செலுத்துவதற்காக பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி பொறுப்பிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக அந்த நிறுவனத்திற்கு முகாமைத்துவ கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தது, எனினும், உரிய செயற்திட்டங்களில் உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தையும் விஞ்சியிருந்த போதிலும், செயற்திட்டத்தை முழுமைப்படுத்தி வீட்டு நலனாளிகளுக்கு கையளிப்பதற்குரிய கடன் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

### 3.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 563 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி கையளிக்கப்பட்ட பிட்டிபன தலகல வீதியில் கட்டம் 1 அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மிகுதி வேலை நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக 2019 மார்ச் 06 மற்றும் 2020 நவம்பர் 27 ஆம் திகதியில் ரூபா 114 மில்லியன் கூட்டு மொத்தமாக வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.1(ஆ) பந்தியின் பிரகாரம் செயற்திட்டங்கள் இடையூறு இன்றி அமுல்படுத்தக் கூடிய வகையில் விடயங்களை | காணி உரிமையாளர்களினால் அந்த காணிகளுக்கு உட்சென்று அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையின் காரணமாக அரசாங்க காணிச் சட்டத்தின் 14(2)பீ பிரிவின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தில் இலக்கம் 49528 மற்றும் 49529 இன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. | முன்னுரிமை தேவையின் அடிப்படையில் செயற்திட்டங்களை இனங்காணல் மற்றும் தேவையான காணிகளை கைப்பற்றுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் இலக்கிடப்பட்ட காலத்தில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்து உரிய நலன்கள் மக்களுக்கு வழங்குதல் அமைச்சின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தாமல் உரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையால் நிர்மாண நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கும் போது காணியை கைப்பற்றுதல் மற்றும் இழப்பீடு செலுத்துதல் தொடர்பாக பிரதேச வாசிகள் எதிர்ப்பு எழுந்திருந்தது. அந்த எதிர்ப்பின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையால் சந்தர்ப்ப சூழ்நிலையில் கிரயங்களுடன் நிதியத்தை பயன்படுத்தி நிர்மாணிப்பதற்கு குறித்துரைத்த வீதியை நிர்மாணித்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை மக்களுக்கு வழங்குவதற்கு முடியாது காணப்பட்டது. | | |
| (ஆ) | அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 113.93 மில்லியன் பெறுமதியான 07 செயற்திட்டங்கள் நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதில் சில செயற்திட்டங்களுக்காக 25 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையிலான செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டங்கள் கைவிடப்படுமாயின் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 48.62 மில்லியன் சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 05 செயற்திட்டங்களை முன்கொண்டு செல்வதற்காக திறைசேரியினால் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைகள் தற்போது முன்கொண்டு செல்லப்படுகின்றது. | பொருளாதார ரீதியில் நலன்களை பெற்றுக் கொள்வதற்காக அதிக பூர்த்தி சதவீதம் ஒன்றுடன் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தோட்ட பிரிவின் விஷேட செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ரூபா 4 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்துடன், தலவாக்கலை பாரம்பரிய உணவகத்தை ஆரம்பிக்கும் செயற்திட்டம், ரூபா 9 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்துடன், 2020 ஏப்ரல் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வட்டகொட சமூக சக்தி நிலையத்தின் மூலம் கோழி மற்றும் ஆடு வளர்த்தல், மலர்ப் பயிர்ச் செய்கை மற்றும் பொலித்தீன் சார்ந்த உற்பத்தி செயற்திட்டத்திற்காக முறையே ரூபா 1.5 மில்லியன் மற்றும் ரூபா 1.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த செயற்திட்டம் | சம்பிரதாய உணவகத்தை ஆரம்பிக்கும் செயற்திட்டம் தொடர்பாக தற்போதைய செயல் முன்னேற்றம் தொடர்பாக தகவல்களை விசாரனை செய்து பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் - சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மண்டபத்திற்கு 2023 மே 26 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கைவிடப்பட்ட செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு உரிய நலன்களை வழங்குவதற்கு செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைவிடப்பட்டிருந்ததுடன், செலவிடப்பட்ட பணம் பயனற்றதாக இருந்தது. இந்த செயற்திட்டத்தை கைவிடுவதற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஈ) | அமைச்சின் வீடமைப்பு பிரிவினால் 2017 – 2020 காலப் பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 4,989 மில்லியன் ஆன 10 வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 27,555 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதற்காக ரூபா 4,025 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 5,604 வீடுகள் மாத்திரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிர்மாணித்தல் செயல் முன்னேற்றம் 25 சதவீதத்தை விட குறைவான 07 வீடமைப்பு செயற்திட்டங்களும், 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான 02 செயற்திட்டங்களும் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட ஒரு செயற்திட்டமும் காணப்பட்டது. இந்த செயற்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டிய ஏனைய வீடுகளின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்யாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டது. | 2020 ஆம் ஆண்டு முதல் அது தொடர் வேலையாக செயற்திட்டம் பூர்த்தி செய்வதற்காக போதியளவு நிதி ஏற்பாடு, கட்டுநிதி கிடைக்கப் பெறாமை மற்றும் கட்டிடப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமையினால் வீடுகளை நிர்மாணிக்கும் கிரயம் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் வீட்டு அலகொன்றுக்காக வழங்கப்படுகின்ற தொகை வீட்டின் முழுமையான வேலைகளை பூர்த்தி செய்வதற்காக போதியளவில் இல்லை. அதன் பிரகாரம் மேலதிக நிதிஏற்பாடு கோரப்பட்டுள்ளது. | ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்களின் அத்தியவசியத்தின் பிரகாரம் நிதியினை வழங்கி செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நலனாளிகளுக்கு வழங்கப்படல் வேண்டும். |

**3.4 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல்முன்னேற்றத்தை பெறாதிருந்த செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் தோட்ட பிரிவின் கீழ் ஹட்டன் மற்றும் நுவரெலியா என்ற 02 வலயங்களில் 06 தோட்டங்களில் வீடமைப்பு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ரூபா 160 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 31 மில்லியன் அதாவது 19 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு பௌதீக செயல் முன்னேற்றமும் | 2023 ஆம் ஆண்டிற்காக அமைச்சு தனது வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கியிருந்த நிதி ஏற்பாட்டின் அளவான ரூபா 500 மில்லியன் தொகையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யக் கூடிய வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்களின் அத்தியவசியத்தின் பிரகாரம் நிதியினை வழங்கி செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நலனாளிகளுக்கு வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாண மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் அபிவிருத்தி பிரிவினால் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ‘‘வெலிஓய நிவாச’’ உத்தேச திட்டத்திற்காக ரூபா 32 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு இலக்கிடப்பட்ட 256 வீடுகளில் எந்தவொரு வீட்டினதும் வேலை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும் 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட முள்ளைத் தீவு, கிளிநொச்சி வீடுகளின் அபிவிருத்தி வேலை செயற்திட்டத்திற்காக ரூபா 530 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு வீட்டினதும் அபிவிருத்தி வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் பின்னர் பொதுத் திறைசேரியில் இருந்து நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை.<br>மதிப்பீட்டின் மிகுதி தொகை 2023 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கும் நிலத்தின் வேலைகள் 2023 யூலை மாதம் ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்களின் அத்தியவசியத்தின் பிரகாரம் நிதியினை வழங்கி செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நலனாளிகளுக்கு வழங்கப்படல் வேண்டும். |
| (இ) | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுநீரக நோய் அநேகமாக காணப்படுகின்ற பிரதேச மக்களுக்காக நீரை சுத்திகரிக்கும் 115 அலகுகளை ஸ்தாபிப்பதற்காக கிராமிய வீடமைப்பு, நிர்மாணம், கட்டிடப் பொருட்கள் நிர்மாண அபிவிருத்தி பிரிவினால் ரூபா 481 மில்லியன் பெறுமதியில் ஒப்பந்தம் ஒன்று தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் ஊடாக 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதி தனியார் கம்பனிக்கு<br>கையளிக்கப்பட்டிருந்தது.<br>ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தின் கீழ் சுத்திகரிக்கப்பட்ட முறைமையில் 50 சுத்திகரிக்கப்பட்ட முறைமையை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அதன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 209 மில்லியன் ஆகும். அதில் ரூபா 111 மில்லின் தொகை ஒப்பந்தத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் ஒப்பந்தகாரருக்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது சமூக நீர் வழங்கல் திணைக்களம் | செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு நீரை சுத்திகரிக்கும் 25 அலகுகள் எதிர்வரும் சில நாட்களின் போது மக்கள் உரித்துக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் தயார்செய்யப்படுகின்றது. | செயற்திட்டத்திற்கான பணம் ஒப்பந்த காரருக்கு விடுவித்து இருக்கும் போது விஷேட கவனம் செலுத்த வேண்டிய மக்களுக்காக அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டத்தில் உடனடியாக அமுல்படுத்துவது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊடாக செலுத்தப்பட்ட போதிலும், எந்தவொரு நீர் சுத்திகரிக்கும் முறைமையேனும் 2022 திசெம்பர் 31 வரையும் செயற்படு நிலைக்கு கொண்டு வந்து நிறுசீரக நோயாளர்களுக்கு நீர் வழங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் கட்டிடப் பொருள் கைத்தொழில் அபிவிருத்தி பிரிவினால் வடக்கு கிழக்கு மாகாணங்களின் குடும்பங்களுக்காக கொங்கிரீட் பனல் வீடுகளில் 300 அலகுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 384 மில்லியனில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 106 மில்லியன் ஒப்பந்த நிறுவனத்திற்கும், ரூபா 3 மில்லியன் ஆலோசனை நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட பணம் மொத்த கிரயத்தில் 28 சதவீதம் ஆக இருந்த போதும், பௌதீக செயல் முன்னேற்றம் 4 சதவீதம் மாத்திரம் ஆகும். அதாவது, முழுமையாக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 12 மாத்திரமாக இருந்தது. நிர்மாணிக்கப்பட்ட 12 வீடுகள் தொடர்பாகவும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தினால் 2022 சனவரி 12 வழங்கப்பட்டிருந்த இறுதி மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளுக்கு புறம்பாக இருந்தமை மற்றும் வழுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இணங்கப்பட்ட முழுத்தொகையும் ஒப்பந்த காரருக்கு செலுத்தப்பட்டது. மேலும். உடன்படிக்கை பிரிவுகளை மீறியதன் காரணமாக ஒப்பந்தத்தை உடனடியாக அமுல்படும் வகையில் முடிவுறுத்தப்பட்ட போதும் நிதிப் பிரமாணம் 507 இன் பிரகாரம் கருப்பு பட்டியலில் பெயரை உள்ளடக்குவதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகார கம்பனிக்கு செயற்திட்டத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டு 2023 பெப்ரவரி 22 ஆம் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் வேலை ஆரம்பித்தல் முற்பணத்தில் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 68.93 மில்லியன் தொகை மற்றும் செயலாற்றல் பிணை முறியான ரூபா 19.2 மில்லியன் தொகை என்பவற்றை பணமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மாண செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் பணத்தை விடுவித்தல் வேண்டும். |

### 3.5 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **கொழும்பு நகரம் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டம் (MCUDP)** | | |
| கொழும்பு நீர் எல்லையில் போசனையுள்ள பிரதேசத்தில் நீர் வழிந்தோடுவதை குறைத்து மற்றும் கொழும்பு உள்நகர பிரதேசத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் இயலவை வலுப்படுத்துதல் கொழும்பு நகரத்தை அலகுபடுத்துவதற்காக கொண்டு கொழும்பு நகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் 2017 யூன் 30 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டு 2012 யூலை 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 யூன் 30 ஆம் திகதி வரை பல சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக கடன் வழங்குகின்ற முகவர் நிறுவனத்தினால் வழங்குவதற்கு தீர்மானிக்கும் நிர்ணயிக்கப்பட்ட அ.டொலர் 213 மில்லயனுக்கு சமமான ரூபா 27,890 மில்லியன் மொத்த தொகையில் 93 சதவீதம் அ.டொலர் 198 மில்லியன் அதாவது ரூபா 33,392 மில்லியன் மற்றும் அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட அ.டொலர் 108 மில்லியனுக்கு சமமான ரூபா 14,141 மில்லியன் ஆன மொத்த நிதி ஏற்பாடுகளில் 49 சதவீதத்தை பிரதி நிதிப்படுத்துவப்படுத்தும் அ.டொலர் 69 மில்லியனுக்கு சமமான ரூபா 8,368 மில்லியன் மாத்திரம் 2022 யூன் 30 ஆம் திகதி வரையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இந்த செயற்திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 353 மில்லியன் ஆன நொரிஸ் கெனல் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு எதிராக அதற்கு அருகில் உள்ள மாடி குடியிருப்பாளர் வீட்டு அலகுகளில் வசிப்பவர்களினால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக அந்த நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நொரிஸ் கெனல் அபிவிருத்திற்கான ஒப்பந்தம் 2022 இறுதி அரைப் பகுதியில் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தை அகற்றுவதற்கு முடியுமான வகையில் அமைச்சினால் கொழும்பு மாநகர சபை ஊடாக இதன் மிகுதி நிர்மாண நடவடிக்கைகளை செய்வதற்கு இரு தரப்பினரும் நிர்மாண நடவடிக்கைகளை செய்வதற்கு இரு தரப்பினரும் இணக்கப் பாட்டிற்கு வந்திருந்தனர். | செயற்திட்டத்தின் நோக்கமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்குரிய நாரஹேன்பிட்ட கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடம், கொழும்பு உட்புற நகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஒன்றிணைந்த வெள்ள நீர் முகாமைத்துவ முறைமையொன்று (IFMS) ஸ்தாபிப்பதற்காக ரூபா 77.4 மில்லியன் செலவிடப்பட்டு உள்ளபடியான கட்டுப்பாட்டு முறைமை நிலையம் (RTC) ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்பார்வை நிர்வாகம் மற்றும் தரவு சேகரித்தல் முறைமை (SCADA) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது அதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் அமுல்படுத்தப்படுகின்றது. | மேற்பார்வை நிர்வாகம் மற்றும் தரவு சேகரித்தல் முறைமையை ஸ்தாபித்து எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) **உபாய வழி நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (SCDP)**

| | | |
|---|---|---|
| 2014 மே 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அதாவது 5½ வருடங்கள் அளவில் பூர்த்தி செய்வதற்கு முன்மொழியப்பட்ட உபாய வழி நகர அபிவிருத்தி செயற்திட்டம் 2022 யூன் 30 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், | ஏற்றுக்கொள்கின்றோம். காணப்படுகின்ற நிலைமையில் நிதியத்தின் பயன்பாடு குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | செயற்திட்டத்தில் இலக்கிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆரம்பிக்கட்ட திகதியில் இருந்து 8½ வருட கால எல்லையில் கடன் முகவர் நிறுவனத்தினால் வழங்குவற்கு இணங்கப்பட்ட அ.டொலர் 202 மில்லியனுக்கு சமமான ரூபா 27,507 மில்லியன் ஆன மொத்த நிதியில் 45 சதவீதம் அதாவது அ.டொலர் 90 மில்லியனுக்கு சமமான ரூபா 16,437 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| இந்த செயற்திட்டத்தின் கீழ் காலி நகரத்தில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட வெள்ள நீர் கட்டுப்பாட்டு வடிகாண் முறைமை 16 இனை நிர்மாணிப்பதற்காக தேவையான காணியினை கையேற்காமையினால் நிர்மாண நடவடிக்கைகளை செய்ய முடியாதிருந்தது. இந்த செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைகளுக்காக ரூபா 21.49 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டதன் காரணமாக இந்த செலவினம் பயனற்றதாக இருந்தது. | காலி நகரத்தில் வெள்ள நீர் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை இனங்காண்பதற்கும் அதன் பிரகாரம் வாய்க்கால் வழிகளை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் நீர் ஒன்று சேர்கின்ற இடங்களை மறுசீரமைப்பதற்காக இந்த ஆலோசனை சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் மூலம் இனங்காணப்பட்ட வாய்க்கால் வழிகள் சிலது மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. | சாத்திய வள ஆய்வின் பின்னர் இந்த செயற்திட்டங்களை இனங்காண்பதன் மூலம் சிக்கனமற்ற ஆலோசனை சேவை கட்டணங்களை குறைத்துக் கொள்ள இயலுமாக இருந்தது. |
| மேலும், செயற்திட்டத்தின் கீழ் காலி மொரகொட பிரதான வாய்க்கால் மற்றும் பண்சலை உப வீதி வழிகளை நிர்மாணிப்பதற்காக இணங்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 845 மில்லியன் ஆக இருந்ததுடன், வீதியின் மொத்த நீளம் 4250 மீற்றர் ஆகும். எனினும், ரூபா 397 மில்லியன் செலவில் 1850 மீற்றர் அளவில் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டம் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக அதன் மொத்த நலன்களையும் மக்களுக்கு கைப்பற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது. செயற்திட்டத்தால் நிர்மாணங்களுக்கு தேவையான காணியை கையேற்க முடியாமையினால் இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆரம்பத்தில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு மீண்டும் வேறொருவருக்கு கையளிக்கப்பட்டமையால் பின்னர் ஏற்பட்ட தொழில்நுட்ப மற்றும் புவியியல் வசதியின்மையின் காரணமாக வாய்க்கால் வழிகளை பூர்த்தி செய்வதற்கான காலம் போதியளவில் காணப்படவில்லை. | சாத்திய வள ஆய்வின் பின்னர் இந்த செயற்திட்டங்களை இனங்காண்பதன் மூலம் சிக்கனமற்ற ஆலோசனை சேவை கட்டணங்களை குறைத்துக் கொள்ள இயலுமாக இருந்தது. |

| | | |
|---|---|---|
| உபாய வழிகளுடனான நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு கூறான கண்டி பல்நோக்கு போக்குவரத்து துறை செயற்திட்டம் (Kandy Multimodal Transport Terminal – KMTT) கால ரீதியில் ஆரம்பிக்காமையின் காரணமாக அதற்காக ஒதுக்கப்பட்ட அ.டொலர் 92 மில்லியன் கடன் அளவு வழங்குதல், கடன் முகவர் நிறுவனத்தினால் இரத்துச் செய்யப்பட்டமையினால் செயற்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | கண்டி பல்நோக்கு போக்குவரத்துத் துறை செயற்திட்டம் கால ரீதியில் ஆரம்பிப்பதற்கு அந்த செயற்திட்டத்திற்கான வழங்கல் பெறுகைகளை செய்து தெரிவு செய்யப்பட்ட திட்டமிடல் ஆலோசனை நிறுவனத்தின் செயற்திறனற்ற செயலாற்றல் காரணமாக இருந்ததுடன், அந்த செயற்திட்டத்திற்கான காணி மற்றும் ஏனைய பிரதேசங்களை கைப்பற்றும் போது கவனத்தில் கொள்ளக் கூடிய காலம் எடுத்திருந்தது. | செயற்திறனான ஒப்பந்தம் மற்றும் ஆலோசனை நிறுவனத்தை தெரிவு செய்து ஆக்கபூர்வமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (இ) **நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்கு உதவி அளிக்கும் செயற்திட்டம். (SCURP)** | | |
| நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்கு உதவி வழங்கும் செயற்திட்டத்திற்காக கடன் வழங்குகின்ற நிறுவனத்தால் இணங்கப்பட்ட அ.டொலர் 200 மில்லியன் கடன் தொகையில், செயற்திட்டம் ஆரம்பமாகி 03 வருடங்கள் மற்றும் 6 மாதங்களின் பின்னர் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்திற்காக அ.டொலர் 40 மில்லினுக்கு சமமான ரூபா 10,054 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2022/2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொரோன தொற்று நோய் நிலைமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி இதற்கு காரணமாகும். | உரிய காலத்தில் நோக்கம் இடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| செயற்திட்டத்தின் நிதியப் பயன்பாட்டின் செயற்திறனின்மைக்கான காரணமாக அ.டொலர் 200 மில்லியன் கடன் தொகையில் அ.டொலர் 70 மில்லியனால் குறைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இதன் பிரகாரம் 03 ஆவது கட்டத்தில் செயற்திட்ட செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்ததுடன், வீட்டு நலனாளிகளின் எண்ணிக்கையும் 1,272 இனால் குறைக்கப்பட்டிருந்தது. மேலும், | அத்தியவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ வழங்களை வழங்குவதற்காக SCURP இலிருந்து அ.டொலர் 70 மில்லியன் மீள அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையை திருத்தம் வெளிநாட்டு வழங்கல் திணைக்கத்தால் வழங்கப்பட்ட 2022 யூலை 01 ஆம் திகதிய மீள்கட்டமைக்கப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திறனான நிதி முகாமைத்துவ முறையினை அமுல்படுத்த வேண்டியிருந்தமை மற்றும் செயற்திட்ட நிதியீட்ட மூளங்களை கண்டறிவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அ.டொலர் 42 மில்லியன் ஆன இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு அ.டொலர் 28 மில்லியன் வரை அ.டொலர் 14 மில்லியனால் குறைவடைந்திருந்தது. திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் காணி மீள் அபிவிருத்திக்காக தனியார் கூட்டு முயற்சி பங்களிப்பு முழுமையாக அகற்றப்பட்டிருந்தது. | | |
| செயற்திட்டத்தின் கீழ் 624 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக கொலம்பகே மாவத்தையில் வீடமைப்பு செயற்திட்டம் 2020 யூன் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 2023 ஆகஸ்ட் 24 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்காக ரூபா 3,596 மில்லியன் பெறுமதியில் ஒப்பந்தகாரருக் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 1,793 மில்லியன் செலவிடப்பட்டு 74 தசவீத பௌதீக செயல் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்ட போதும், ரூபா 1,902 மில்லியன் அதாவது ரூபா 108.95 மில்லியன் மேலதிகமாக செலவிடப்பட்டிருந்த போதிலும். 52 சதவீதமான பௌதீக செயல்முன்னேற்றம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பூகோள ரீதியில் தாக்கத்திற்கு உட்பட்ட கொரோனா 19 தொற்று நோய் மற்றும் சுகாதார அதிகாரிகளினால் விநியோகிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டிகளின் காரணமாக செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் அதிக அளவில் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் கீழ் நிர்மாண உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்வதற்காக அதன் நடவடிக்கைகளுக்கு இணைந்ததாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| மேலும், மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,982 மில்லியன் ஆன 300 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக ஒபேசேகரபுர வீடமைப்பு திட்டத்தின் நடவடிக்கைகள் 2020 மே 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ஒப்பந்தகாரரின் நலிவான செயல் முன்னேற்றத்தின் காரணமாக 2022 மார்ச் 29 ஆம் திகதி இந்த செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன், அது வரையில் ரூபா 271 மில்லியன் | மீண்டும் கேள்வி கோரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கால அட்டவணையில் பூர்த்தி செய்வதற்காக நிர்மாண நடவடிக்கைகளுக்கு அண்மித்ததாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவில் 14 சதவீத செயல் முன்னேற்றம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. எனினும், 2023 யூலை மாதம் வரை இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு செயற்திட்டம் மற்றும் வரிசை அமைச்சு எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | | |
| அவ்வாறே 700 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான அப்பல்வத்தை வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ரூபா 4,473 மில்லியன் பெறுமதியில் சீன கம்பனியொன்று கையளிக்கப்பட்டிருந்தது. இதன் நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஒக்டோபர் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஒக்டேபார் 17 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. 2022 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் 64 சதவீதம் எதிர்பார்க்கப்பட்ட போதும், ரூபா 1,145 மில்லியன் செலவிடப்பட்டு 22 சதவீத பௌதீக செயல் முன்னேற்றம் மாத்திரமே அடையப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொரோனா 19 தொற்று நோயின் காரணமாக அதிகளவில் பாதிப்புக்கு உட்பட்டிருந்ததுடன், கடந்த சில வருடங்களில் நெருக்கடிக்கு உள்ளான பொருளாத நெருக்கடியால் செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு காரணமாக இருந்தது. | மிகுதி வேலைகளை விரைவாக மேற்கொள்வதற்கு சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 4,511 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 750 வீடுகளை நிர்மாணிக்கும் பர்கியுஸன் மாவத்தை வீடமைப்பு திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் சீன கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தம் 2021 சனவரி 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 2024 சனவரி 04 ஆம் திகதி முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயல் திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் 76 சதவீதம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், | கொரோனா 19 தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமான இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றலுக்கு அதிக அளவில் தாக்கமளித்திருந்தது. | மிகுதி வேலைகளை விரிவுபடுத்துவதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 595 மில்லியன் செலவில் அடையப்பட்ட பௌதீக செயல் முன்னேற்றம் 7 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | | |
| மேலும் 700 வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் மாதம்பிடி வீடமைப்பு செயற்திட்டத்தில் நிர்மாண நடவடிக்கைகள் ரூபா 4,529 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 2020 மே 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 2024 மே 03 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 33 சதவீத பௌதீக செயல் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ரூபா 1,164 மில்லியன் செலவிடப்பட்டு பெறப்பட்டிருந்த செயல் முன்னேற்றம் 15 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொரேனா 19 தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றலுக்கு அதிக தாக்கம் ஏற்பட்டிருந்தது. அதனால் கால நீடிப்பு (EOT) எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மிகுதி வேலைகளை விரைவாக மேற்கொள்வதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| செயற்திட்டத்தை அமுல்படுத்தும் கைநூலின் 2 ஆவது கூறின் கீழ் காணி அபிவிருத்தி செய்யும் 11 செயற்திட்டங்களின் கீழ் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் செயற்திட்டத்தின் கீழ் 111.5 ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 4 ஏக்கர் காணி மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது இலக்கிடப்பட்ட அளவில் 3.58 சதவீதம் ஆன மிகவும் குறைந்த சதவீதம் ஆகும். | தற்போது அது தொடர்பாக மீளாய்வு செய்து உரிய அறிக்கையொன்றை மீண்டும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு (NDP) 2023 சனவரி 30 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| பர்கியுஸன் வீதி வீடமைப்பு திட்டத்திற்காக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், சுற்றாடல் ஆலோசனை சபை, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களில் இருந்து பெறவேண்டிய அனுமதிப் | செயற்திட்டத்திற்குரிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு, கழிவுப் பொருள் சுத்தகரிக்கும் பிரச்சினைகளின் காரணமாக பர்கியுஸன் வீதியில் சுற்றாடல் விடுவிப்பு மற்றும் கட்டிட அனுமதிப் பத்திரம் தாமதமாகி இருந்ததுடன், அங்கீகாரம் இன்னும் பெறுவதற்கு | செயற்திட்டத்தை ஆரம்பிப்பறத்கு முன் உரிய அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் செயற்திட்டத்திற்காக மற்றும் தகைமை உடைய காணியை தெரிவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பத்திரம், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், பெறப்பட்டிருக்கவில்லை. | தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | **நகர செயற்திட்டங்களை தயாரிப்பதில் வசதி அளிக்கும் செயற்திட்டம் (UPPF)** | | |
| | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட கடன் தொகை ரூபா 883.88 மில்லியனுக்கு சமமான அ.டொலர் 4.65 மில்லியனாக இருந்துடன், செயற்திட்டம் 2019 மார்ச் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022 மார்ச் 31 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 38 சதவீத்தை பிரதிநிதிப்படுத்தும் ரூபா 425.6 மில்லியனுக்கு சமமான அ.டொலர் 2.16 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. எனினும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய கடிதத்தின் ஆலோசனையின் படி அத்திகதியில் இருந்து இந்த செயற்திட்டத்தின் சகல செயற்பாட்டு நடவடிக்கைகளையும் நிறுத்தப்பட்டதன் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 02 ஆலோசனை நிறுவனங்களால் வழங்க வேண்டிய 38 ஆரம்ப அறிச்கைகளில் 17 உம், 38 ஆரம்ப அறிக்கைகளில் 18 உம் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும், 2021 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு ஆலோசனை நிறுவனத்தால் வழங்க வேண்டிய 29 ஆரம்ப அறிக்கைகளில் 05 உம், 29 இறுதி அறிக்கைகளில் 28 உம் கிடைத்திருக்கவில்லை.<br>செயற்திட்டத்தை நிறுத்தும் போது செயற்திட்டத்தால் வழங்க வேண்டிய நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 42 சதவீதம் மற்றும் 68 சதவீதமாக இருந்தது. | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியம் ஊடாக வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப உதவி ஊடாக செயற்திட்டத்தை அமைக்கும் தயாரிக்கும் பூர்த்தி செய்வதற்கு தற்போதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எனினும் 2022 ஏப்ரல் 27 ஆம் திகதிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் திகதி 2024 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக விரிவான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விரிவான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் பிரகாரம் அதன் செயல் முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் கீழ் எஞ்சிய பணிகளை இனங்கண்டு அந்த இலக்கினை அடைந்து கொள்வது தொடர்பில் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்து அதன் பிரகாரம் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் வேண்டும். |

(உ) **அநுராதபுரம் ஒன்றிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் (AIUDP)**

| | | |
|---|---|---|
| அநுராதபுரம் ஒன்றிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், கடன் வழங்குகின்ற நிறுவனத்தால் இணங்கப்பட்ட ரூபா 10,025 மில்லியன் கடன் தொகையில் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 2,164 மில்லியன் (21 சதவீதம்) மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால் கடன் வசதிகள் 2023 செப்டம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | தற்போது திறைசேரியே நிதி வழங்குவதுடன், கலந்துரையாடலின் பின்னர் குறைந்த மட்டத்தில் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு செயற்திட்டம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றது. | மேலதிக செலவினங்கள் இன்றி வேலைத் திட்டத்தின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| செயற்திட்டத்தின் கீழ் புகையிரத பிளாசா அபிவிருத்தியின் கீழ் ரூபா 98 மில்லியன் பெறுமதியில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட அநுராதபுர புகையிரத நிலையத்தின் சிற்றுண்டிச்சாலை உள்ளடக்கிய துணை பகுதிகள், 2022 ஆம் ஆண்டின் போது புகையிரத திணைக்களத்திற்கு கைளிக்கப்பட்டிருந்தது. எனினும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை 2023 மே 31 வரையும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தீர்வொன்றை வழங்குவதற்கு மற்றும் அதன் நிலைபேறான உறுதிப்படுத்தலுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பை ஏற்படுத்தி கொள்வதற்கு செயற்திட்டம் தீர்மானித்திருந்தது. | புகையிரத திணைக்களத்துடன் நீண்ட காலரீயில் உடன்படிக்கை செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| வடக்கு மற்றும் தெற்கு பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தை நிர்மாணிக்கும் | நாடு முகங்கொடுத்துள்ள நிதி நெருக்கடி மற்றும் கடன் வழங்குகின்ற நிறுவனம் கடன் | மிகுதி வேலை நடவடிக்கைகளை குறித்துரைத்த நேரத்தில் |

| | | |
|---|---|---|
| ஆரம்ப நடவடிக்கைகளுக்காக ரூபா 288 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் அந்த செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையால் செலவிடப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது. | தொகையை கைவிட்டதன் காரணமாக செயற்திட்ட திட்டமிடலின் பிரகாரம் பேணிச் செல்வதற்கு முடியாதிருந்தது. வடக்கு பலநோக்கு போக்குவரத்து நிலையத்தரிற்காக கைப்பற்றப்பட்ட காணி அநுராதபுரம் மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையால் எதிர்கால அபிவிருத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதனால் இந்த காணி கைப்பற்றுதல் வீணாகியிருந்தது. | நிறைவேற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| அவ்வாறே சுரப்புர திறந்த நடன மேடை மற்றும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் திறந்த அரங்கு மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் 90 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பிரதான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (மின்சார விளக்குகள் மற்றும் இருக்கைகள்) 2023 மே 31 வரையும் வழங்கப்படாமையின் காரணமாக அந்த சினிமா மண்டபத்தை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. அதனால் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 285.76 மில்லியன் பயனற்ற செலவினமாகியிருந்தது. | AFD இனால் நிதியம் வழங்குதல் தற்காலிகமாக கைவிடப்பட்டமையினால் இறுதி வேலைகளை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான பணம் காணப்படவில்லை. | மிகுதி நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் பூர்த்தி செய்தல் வேண்டும். |

**3.6 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.1.1(இ) பந்தியின் பிரகாரம் தேவையான நிதி ஏற்பாடு போதியளவில் உறுதிப்படுத்தப்படாமல் முன்னாள் நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, மூலப் பொருள், கழிவுப் பொருள் அகற்றுதல் மற்றும் சமூக சுத்திகரிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சினால் சுகுறுபாய கட்டிடத்தில் 17 மற்றும் 18 ஆவது மாடிகளில் | சராசரி பொதுவான நடைமுறைகளுக்கு புறம்பாக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.8.அ.i இன் பிரிவின் பிரகாரம் அவசர தேவையான கருதி இந்த நிர்மாணங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி ஏற்பாட்டை ஒதுக்கி பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |

அலுவலகங்களை ஸ்தாபித்தல் மற்றும் ஆவண காப்பகத்தை தயாரிக்கும் பணிகளுக்காக அவசர பெறுகை திட்டத்தை பயன்படுத்தி ஒப்பந்த காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2021 திசெம்பர் 27 ஆம் திகதி அதன் கீழ் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், நிதி ஏற்பாடு கிடைக்காமையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 5.95 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.4.1(அ) பந்திக்கு முரணாக இந்த பணிகளுக்காக ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்கான அங்கீகாரம் உரிய ஒப்பந்த கார நிர்மாணித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரே கிடைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுதல் மற்றும் சமூக சுத்திகரிப்பு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்பட்ட KX-4890 என்ற அதி சொகுசு ஜீப் வண்டி 2022 ஏப்ரல் 21 ஆம் திகதி முன்னால் இருந்து இராஜாங்க அமைச்சரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த போதும், 2022 மே 09 ஆம் திகதி அவர் இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து விலகி வாகனத்தை மீண்டும் அமைச்சுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனத்தை முறையான பிரகாரம் மீண்டும் கையளிக்குமாறு இராஜாங்க அமைச்சருக்கு தனிப்பட்ட ரீதியில் பல சந்தர்ப்பங்களின் போது அறிவிக்கப்பட்ட போதும் சிறந்த பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. | அமைச்சுக்குரிய வாகனத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு அல்லது தற்போதை அமைச்சுக்கு கையளிப்பதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தோட்ட வீடுகள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவிற்கு சொந்தமான 08 வாகனங்கள் மற்றும் நகர அபிவிருத்தி பிரிவிற்கு சொந்தமான ஒரு வாகனம் என்பன சௌமியமூர்த்தி | நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 02 நிறுவனங்களுக்கு 08 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. அந்த | அமைச்சு தேவையான வாகன அணியினை தீர்மானித்து செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொண்டமான ஞாபகார்ந்த மண்டபம், பொருந்தோட்ட வலயங்களுக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபை மற்றும் காண்படப்ட இரத்தினக் கல் மற்றும் ஆபரணங்கள் இராஜாங்க அமைச்சுக்கு தற்காலிக ரீதியில் வழங்கப்பட்ட போதும், 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீண்டும் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் சேவை மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்களை அமைச்சு மேற்கொள்வதுடன், அந்த செலவினம் பின்னர் மீளளிப்பு செய்யப்படுகின்றது. | |
| (இ) | கிராமிய வீடுகள் மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில் அபிவிருத்தி பிரிவிற்குரியதாக காணப்பட்ட வ/ப லங்கா கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட 03 வாகனங்கள் குறைவான பயன்பாட்டுடன் அந்த வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன், இந்த வாகனங்கள் அமைச்சுக்கு கையேற்கப்பட்டு அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்ககவில்லை. | அந்த 03 வாகனங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கான குழுவொன்று 2023 மே 15 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேவையான மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | குறைவாக பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையினால் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 7 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனமொன்று 1½ வருட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | பழுதுபார்த்தல்களை விரைவாக மேற்கொண்டு வாகனத்தை அமைச்சுக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பயன்படுத்துக் கூடிய பொருளாதார வளங்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவின் கீழ் இடம்பெற்ற வாகன விபத்துக்களுக்கு உட்பட்டு ரூபா 4 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்த வாகனம் தொடர்பாக நிதிப் | அவசர விபத்தின் பின்னர் பழுதுபார்ப்பதற்கு செலவிடப்பட்ட பணம் காப்புறுதி மேவுகை மூலம் மீளளிப்பு செய்து கொள்வதற்கும் மீளளிப்பு செய்வதற்கு முடியாதுள்ள பணத்தை வாகன | நட்டம் ஏற்பட்ட வாகனம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரமாணம் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. | விபத்துக்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் மூலம் அறவிடுவதற்கும் அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 செப்டம்பர் 21 ஆம் திகதிய 06/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 18 ஆம் பந்தியின் படி கலைக்கப்பட்ட இராஜாங்க அமைச்சின் பெயரில் திறக்கப்பட்டிருந்த வங்கி கணக்கு கணக்காய்வு திகதி வரையிலும், மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அமைச்சின் கீழ் உப அலுவலகங்களில் வங்கி கணக்குகளாக பேணிச் செல்வதற்கு தற்போது தேவையான அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் இலக்கம் 2019 யூன் 25 ஆம் திகதிய NPD/UD/2018/PP/11(Urban Hub) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கட்டுபெத்த சந்தையில் கட்டிட நிர்மாண செயற்திட்டத்தின் மொத்த கிரயத்தில் 15 சதவீதம் அதாவது ரூபா 29.73 மில்லியன் மொரட்டுவ மாநகர சபையினால் செய்ய வேண்டிய போதிலும், நகர அபிவிருத்தி பிரிவினால் அந்த மொத்த தொகையும் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட போதிலும், மொரட்டுவ மாநகர சபையில் இருந்து அறவிட வேண்டிய அந்த பணம் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நகர சபையில் தற்போது காணப்படுகின்ற நிதி நிலைமையின் அடிப்படையில் அந்த பணத்தை செலுத்துவற்கு வசதியீனமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கலந்துரையாடி செலுத்துவதற்கு இணங்கப்பட்ட தொகையை பொருத்தமான பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டு வரையில் சகருக்கும் போதியளவான பாதுகாப்பு உடனான வீடுகளின் கிடைப்பனவு மற்றும் வசிப்பிடங்களை அபிவிருத்தி செய்தல் நிலைபேறான அபிவிருத்தி இலக்காக இனங்காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதியின் போதும் பெறப்பட்டிருந்த | புதிய நிர்மாணங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன். அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளுக்கு மூலதன நிதி ஏற்பாடு மற்றும் கட்டுநிதி போதியளவான பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து | அடையக் கூடிய இலக்குகளை இனங்காண வேண்டியிருந்ததுடன், இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் |

| | | |
|---|---|---|
| செயல்முன்னேற்றம் இலக்கின் அளவில் 8 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | கொள்வறத்கு முடியாதிருந்தது. | பொறுப்பாகும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவையினை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருடகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் தனியார் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளை கையேற்காமல் வீடுகளை நிர்மாணித்து வீட்டு நலனாளிகள் குடியிருந்து வருவதுடன் அந்த குடியிருப்பாளர்களுக்கு உரித்துறுதியை வழங்குதலின் காரணமாக வீடுகளின் சட்ட ரீதியான உரித்து வீட்டு நலனாளிகளுக்கு கிடைக்கப் பெறவில்லை. மேலும் இழப்பீட்டு பணம் கோரியுள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து அதற்கு 20 வருடங்களுக்கு முன்னர் காணி கைப்பற்றப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட போதும் உரிய காணி உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டு பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் காணிகளுக்குரிய உரித்துறுதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் இருந்து காணிகளுக்குரிய உரித்துறுதியை பெற்று வீடுகளின் சட்ட ரீதியான உரித்தை வீட்டு நலனாளிகளுக்கு வழங்குவதற்கும், காணி உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டை பணத்தை விரைவாக செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 5/2008 மற்றும் 05/2008(1) ஆம் இலக்க அரச நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் பிரஜைகள் விஞ்ஞாபனம் வழங்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இந்த அமைச்சிக்காக ஒரு பிரஜைகள் விஞ்ஞாபனம் ஒன்றை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் பிரஜைகள் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படல் வேண்டும். |